



Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'




லீடர்: 04 | இதழ் - 274 | 07.09.2024 | பக்கங்கள்: 11 | editorml21@gmail.com | விலை: 75/-

# சஜித்தை தோற்கடிக்க ரணில்-அநுர டீல்

## பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு!

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவில்லை, மாறாக அநுரகுமார திஸாநாயக்கவை வெற்றிபெறச் செய்வதற்கான "ஒப்பந்த" அடிப்படையிலான போலி வேட்பாளராகவே அவர் களமிறங்கியிருக்கிறார். சஜித்தை தோற்கடிக்க அநுரவுடன் ரணில் டீல் பேசியிருக்கிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

02 ⏭



## ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு முழுமையான விசாரணைகள்



-அநுர குமார திஸாநாயக்க-

உதயன் உள்ளிட்ட பல்வேறு ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை என்பன தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று

02 ⏭

## சஜித்துக்கான ஆதரவில் மாற்றமில்லை



சி.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என எடுத்த தீர்மானம் முறைப்படி எடுக்கப்பட்டதே என தமிழரசு கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02 ⏭

## ராஜபக்சர்களுக்கு எதிராக ரணில் கடுமையான நிலைப்பாடு!



இம்முறை ஜனாதிபதித் தேர்லில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்காது. மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக இருப்பவர்களை விலகிச் செல்லுமாறு ரணில் விக்கிரமசிங்க உத்தர விட்டுள்ளார்.

அரசாங்கத்தில் பெயருக்கு இருந்து கொண்டு, தேர்தல் பணிகளை குழப்பி வந்த

02 ⏭

## சஜித், அனுரவின் பொருளாதார கொள்கை நடைமுறைக்கு சாத்தியமற்றது




அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

பொருளாதார நெருக்கடிக்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள மறுசீரமைப்பு திட்டங்களை குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மாற்றியமைத்தால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் தோற்றம் பெறும். ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் பொருளாதார கொள்கை நடைமுறைக்கு

02 ⏭

## ஜனாதிபதி தேர்தல் தபால்மூல வாக்களிப்பு 80 சதவீதத்தை தாண்டியது



ஜனாதிபதி தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பில் 80 வீதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

02 ⏭

## கட்சி நடவடிக்கைகளில் அதிருப்தி!

### மு.காவை விட்டு வெளியேறினார் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன்



எம்.என்.அப்ராஸ், எஸ்.அஷ்ர.ஃப்கான்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக் கட்டமைப்பில் பாராளுமனற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கட்சி எடுக்கும் நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்த நிலையில் கட்சி செயற்பாடுகளில் சுமார் இரண்டு வருடங்கள் ஒதுங்கியிருந்தேன்.

02 ⏭



நான்கு புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று (06) ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

## சஜித்தை தோற்கடிக்க...

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (06) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில தினங்களுக்கு முன்னர் தேர்தல் பிரசார மேடையொன்றில் சஜித் பிரேமதாஸ வினால் அநுரகுமார திஸாநாயக்கவைத் தோற்கடிக்க முடியாது என்று கூறுகின்றார். இதனூடாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெல்லப் போவதில்லை என்பதை ரணில் விகிரமசிங்க ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

அதேபோன்று ரணில் விக்கிரமசிங்க இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் வெல்லும் நோக்கில் களமிறங்கவில்லை என்று நாம் ஏற்கனவே கூறியிருந்தோம். ஏனெனில் அவர் வெல்வதை விடவும், சஜித் பிரேமதாஸவைத் தோற்கடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளையே முன்னெடுத்து வருகின்றார். ஆகையினால் சஜித் பிரேமதாஸவினால் அநுரகுமார திஸாநாயக்கவைத் தோற்கடிக்க முடியாது என்று கூறுவதன் ஊடாக சஜித்தின் வெற்றிக்காகப் பணியாற்றுவோரை உளவியல் ரீதியில் சோர்வடையச் செய்வதற்கே அவர் முற்படுகின்றார்.

ஜனாதிபதித் தேர்தல்களில் “ஒப்பந்த” அடிப்படையில் செயற்படும் போலி வேட்பாளர்கள் பலர் களமிறங்கு வார்கள். அடுத்த வேட்பாளர் வெற்றி பெறுவதற்கு ஏதுவான பாதையை உருவாக்கிக் கொடுப்பதே அந்த போலி வேட்பாளர்களின் பணியாக இருக்கும். அவ்வாறு தான் இம்முறை ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார்.

அவர் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறுவதற்கு அவசியமான ஆதரவை வழங்குவதற்காகவே தேர்தலில் களமிறங்கியிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும் பிரதானமாக சஜித் பிரேமதாஸவையே தாக்கிப் பேசுகின்றனர்.

அதேபோன்று தபால் மூல வாக்களிப்பு தினத்துக்கு முன்னைய தினம் இரவு அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் நடைபெற்ற ஒரு மணி நேர நிகழ்ச்சியில் அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டார். உண்மையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவது சாத்தியமா? எனவே அநுரகுமார திஸாநாயக்க வெல்வதற்கு அவசியமான பின்னணி, வசதி வாய்ப்புக்கள் அனைத்தையும் ரணில் விக்கிரமசிங்க பெற்றுக் கொடுப்பதையே இது காண்பிக்கின்றது. அடுத்த சில வாரங்களில் ரணில் அநுரவையோ, அநுர ரணிலையோ சாடிப் பேசமாட்டார்கள். மாறாக இருவரும் இணைந்து சஜித் பிரேமதாஸவைத் தூற்றுவார்கள் என்றார்.

## ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்கு...

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உதயன் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, உதயன் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதான அடக்குமுறைகள் தாக்குதல்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் படுகொலைகள் தொடர்பில் அநுரவிடம் சுடடிக்காட்டப்பட்டது. இதையடுத்தே ஊடகப் படுகொலைகள் மற்றும் அடக்குமுறைகள் தொடர்பில் மிக ஆழமான விசாரணைகள் நடத்தப்படும் என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்கள் படுகொலைகள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் குறித்து நீதி நிலைநாட்டப்படும் என்பதில் நான் மிக ஆழமான உறுதியுடன் உள்ளேன்.

இந்தக் குற்றங்கள் நிகழ்ந்து எத்தனை வருடங்கள் கடந்திருந்தாலும் நிச்சயமாக நீதியென்பது நிலைநாட்டப்பட்டே தீரும்.

அனைத்து வழக்குகள் தொடர்பிலும் நான் தீர்க்கமாக விசாரிப்பேன் என்றார்.

இதன்போது உதயன் உள்ளிட்ட ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் குறித்த அறிக்கையொன்று உதயனின் நிர்வாக இயக்குநர் சரவணபவனால் அநுரகுமாரவிடம் கையளிக்கப்பட்டது.

## சஜித்துக்கான ஆதரவில்...

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமாக மீண்டும் கூட்டத்தை மீண்டும் கூட்ட வேண்டிய தேவை இல்லை. கூட்டம் நடைபெற்று தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது.

கட்சியில் அவர் இவர் என பார்த்துக் கொண்டு இருந்தால் கூட்ட த்தை நடத்த முடியாது. வந்த உறுப்பினர்கள் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் அவர்கள் எடுத்த தீர்மானம் சரி.

எடுத்த தீர்மானத்தில் உடன்பாடு இல்லை என்றால் அதனை சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதனை அவர்கள் சொல்லலாம். ஆனால் கட்சி தீர்மானம் , உரிய கோரத்துடன் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் எனவே அந்த தீர்மானம் வலுவான தீர்மானம் என தெரிவித்தார்.

## சஜித் அநுரவின் பொருளாதார கொள்கைகள்...

சாத்தியமற்றது என வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்ற தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானங்களுக்கு எவ்விதமான நிபந்தனையில்லாமல் ஒத்துழைப்பு வழங்கினோம்.

பொருளாதார மீட்சிக்காக எடுத்த தீர்மானங்கள் வெற்றிப் பெற்றுள்ளன.

குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சிப் பெற்றுள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை மீண்டும் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக நிபந்தனையில்லாமல் ஆதரவு வழங்கி புதிய அரசியல் கூட்டணியை அமைத்துள்ளோம்.

பொருளாதார நெருக்கடிக்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மறுசீரமைத்தால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் தோற்றம் பெறும். என்பதை மக்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். பரீட்சித்துப் பார்க்கும் நிலையில் நாடு இல்லை.

ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரின் பொருளாதார கொள்கை நடைமுறைக்கு சாத்தியமற்றது. பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு நாட்டு மக்கள் சிறந்த அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றார்.

## கட்சி நடவடிக்கைகளில் அதிருப்தி...

கல்முனையில் நேற்று (06) இடம்பெற்ற ஊடகவியவியலார் சந்திப்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சிரேஷ்ட சட்டத்தரணி ஆரீப் சம்சுதீன் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்து தெரிவிக்கையில்,

கட்சி எடுக்கும் நடவடிக்கைகளில் அதிருப்தியடைந்த நிலையில் கட்சி செயற்பாடுகளில் சுமார் இரண்டு வருடங்கள் ஒதுங்கியிருந்தேன். இதனால் நான் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் வகித்த இளைஞர் தேசிய அமைப்பாளர் மற்றும் உயர்பீட உறுப்பினர் பதவிகளை இராஜினாமா செய்வதாக கட்சியின் செயலாளருக்கு அறிவித்துள்ளேன்.

ஆனால் இச்சமயத்தில் நான் அனுர குமார திஸநாயக்கவை ஆதரிக்கும் தீர்மானம் என்பது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உள்ளக குறைபாடுகளில் எவ்வித சம்பந்தமும்மில்லை எனவும் தெரிவித்த அவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கையின் அடிப்படையில் சுயாதீனமாக ஆதரிக்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

## ராஜபக்சர்களுக்கு எதிராக...

நான்கு அமைச்சர், பிரதியமைச்சர்களை பதவி விலக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவிற்கு பலர் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து, ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்காது உள்ளே இருந்து செயல்படுவோரை உடனடியாக வெளியேறுமாறு ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்காமல் மக்களுக்கான பணிகளுக்கு சிலர் முட்டுக்கட்டையாக இருந்த நிலையில் பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் நால்வரை ஜனாதிபதி இதனாலேயே பதவி நீக்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது,

## ஜனாதிபதி தேர்தல் தபால்மூல வாக்களிப்பு...

கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் அதிகளவானோர் கலந்து கொண்டிருந்தாக பிரதி தபால்மா அதிபர் டி.ஏ.ராஜித.கே.ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு நேற்று (06) கருத்து தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

தபால்மூல வாக்குகளை செலுத்த முடியாதவர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் மற்றும் 12 ஆம் திகதிகள் மேலதிக தினங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிராந்திய ஊடகவியலாளர்கள் தேவை, ஆர்வமுள்ளவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசியில் தொடர்வு கொண்டு இணைந்து கொள்ளலாம். 0772539258

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

# ஒலிம்பிக் வீராங்கனையை தீ வைத்து எரித்த காதலன்




கென்யாவில் வசிக்கும் உகாண்டா தடகள வீராங்கனை ஒருவர் அவரது காதலனால் தாக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கென்யாவில் வசிக்கும் உகாண்டா தடகள வீராங்கனை ஒருவர் அவரது காதலனால் தாக்கப்பட்டு தீ வைத்து எரிக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், பலத்த காயமடைந்த அவர் உடலில் 75% தீக்காயங்களுடன் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிரான்ஸ் நஸோயா கவுண்டி பொலிஸ் அதிகாரி ஜெரமையா கூறுகையில், 2024 ஆம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக்கில் தொலைதூர ஓட்டப்பந்தயத்தில் 44 ஆவது இடத்தைப் பிடித்த வீராங்கனையான ரெபேக்கா செப்டேஜி, மேற்கு டிரான்ஸ் நஸோயா கவுண்டியில் உள்ள அவரது வீட்டில் காதலனுடன் ஏற்பட்ட தகராறில் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் போது, ரெபேக்கா செப்டேஜியின் காதலன், டிக்சன் என்டிமா பெட்ரோலை வாங்கி, அவர் மீது ஊற்றி எரித்துள்ளார். இந்தச் சம்பவத்தில் என்டிமாவுக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டன. மேலும், இருவரும் எல்டோரெட் நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கவுண்டியின் பல தடகளப் பயிற்சி மையங்களுக்கு அருகில் இருக்கும் வகையில் டிரான்ஸ் நஸோயாவில் ரெபேக்கா செப்டேஜி நிலம் ஒன்றை வாங்கியுள்ளார். இதனால், கருத்து வேறுபாட்டால் இருவருக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்றார்.

இதேபோல, 2022 ஆம் ஆண்டில், கென்யாவில் பிறந்த பஹ்ரைன் தடகள வீராங்கனையான டமரிஸ் முத்தீ கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் இறந்து கிடந்தார்.

2023 ஆம் ஆண்டில், உகாண்டா ஒலிம்பிக் ஓட்டப்பந்தய வீரரான பெஞ்சமின் கிப்லாகாட் கத்திக்குத்து காயங்களுடன் இறந்து கிடந்தமை குறிப்பிடத்தக்கது

# சுனிதா இல்லாமல் திரும்புகிறது போயிங் ஸ்டார்லைனர் விண்கலன்

சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் இல்லாமல் அவர்கள் சென்ற போயிங் ஸ்டார்லைனர் விண்கலன் மட்டும் பூமிக்கு திரும்பும் என நாசா தெரிவித்துள்ளது.

இது குறித்த டைம்லைனை நாசா பகிர்ந்துள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆளில்லாமல் போயிங் ஸ்டார்லைனர் விண்கலன் சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து புறப்படும். அது சனிக்கிழமை அன்று நியூ மெக்சிக்கோவில் உள்ள ஒயிட் சேன்ட்ஸ் ஸ்பேஸ் ஹார்பரில் தரையிறங்கும் என நாசா தெரிவித்துள்ளது.

இந்திய நேரப்படி வெள்ளிக் கிழமை அதிகாலை 3.34 மணி அளவில் விண்வெளி மையத்தில் இருந்து தானியங்கி முறையில் அன்-டாக் செய்து கொண்டு புறப்படும். அது சனிக்கிழமை காலை 9.33 மணி அளவில் பூமியை அடையும். இது ஸ்டார்லைனர் விண்கலன் சோதனையின் இறுதி கட்டமாக அமையும். இந்த நிகழ்வு முழுவதும் நேரலையில் ஒளிபரப்பாகும் என நாசா தெரிவித்துள்ளது.



விண்கலன் பூமி திரும்பியதும் நாசா விஞ்ஞானிகள் செய்தியாளர்களை சந்திக்க உள்ளனர். கடந்த மாதமே ஆளில்லாமல் (Un-crewed) ஸ்டார் லைனர் பூமிக்கு கொண்டு வரும் முடிவை நாசா அறிவித்திருந்தது. தற்போது அதற்கான நேரத்தை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூன் 5-ம் திகதி சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் என இருவரும் ஸ்டார்லைனரில் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து சர்வதேச விண்வெளி மையத்தை ஜூன் 6-ம் திகதி அடைந்தனர்.

அப்போது முதல் அவர்கள் இருவரும் அங்கேயே உள்ளனர்.

அவர்கள் பயணித்த போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலனில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப கோளாறு இதற்கு காரணமாக அமைந்தது.

விண்வெளி மையத்தில் சுமார் 90 நாட்களாக உள்ள அவர்களை பூமிக்கு அழைத்து வர நாசா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் தான் அவர்கள் பூமிக்கு திரும்புவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் ஸ்பேஸ் எக்ஸ் விண்கலனில் பூமிக்கு திரும்புகிறார்கள். இந்த நிலையில், யாரையும் ஏற்றாமல் ஸ்டாாலைனார் விண்கலம் மட்டும் அடுத்த மாதம் 6-ஆம் திகதி பூமி திரும்பவிருப்பதாக நாசா தற்போது அறிவித்துள்ளது.

# கொத்துக் கொத்தாக செத்து மிதக்கும் மீன்கள்

கிரீஸ் நாட்டில் மத்திய பகுதியில் உள்ள துறைமுக நகரமான வோலோஸ் நகரத்தில் உள்ள கடற்கரை மற்றும் நீர் நிலைகளிலிருந்து மீன்கள் கொத்துக் கொத்தாக உயிரிழந்து மிதப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அங்கு ஒரு மாத காலத்துக்கு அவசர நிலை அறிவிக்கும் அளவுக்கு நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் சென்றுள்ளது.

சுமார் 100 டன்களுக்கும் அதிகமான மீன்கள் உயிரிழந்து மிதக்கின்றன. காலநிலை மாற்றம் காரணிகளால் இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதிகப்படியான மீன்களின் உயிரிழப்பினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு அழுகிய மீன்களால் உடல்நலக் குறைவு ஏற்படும் அபாயமும் உள்ளது. உயிரிழந்த மீன்களை அகற்றும் பணியில் உள்ளூர் நிர்வாகம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

# சிறுபான்மை அரசியல் தலைமைகள் மக்களை ஏமாற்றுகின்றார்களா?

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரப் அவர்களின் மறைவுக்கு பின்னர் அக்கட்சி பல கூறுகளாக பிரிந்து புதிய கட்சிகள் உருவாக்கப்பட்டு அக்கட்சிகளின் தலைமைகளாக பலர் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு பல கூறுகளாக பிரிந்து சென்று தலைமைத்துவங்களை பெற்றுக் கொண்டவர்கள் முஸ்லிம்களின் அரசியல் உரிமைக்காக உருவாக்கப்பட்ட கட்சியை சிதைத்து தலைமைத்துவங்களை பெற்றுக் கொள்வதற்காகவே கட்சியை சிதைத்தார்கள் என்று தோன்றுகின்றது.

ஏனெனில் பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்ற தேர்தல் என வரும் போதெல்லாம் பிரிந்து நின்று ஒருவருக்கொருவர் தேர்தல் மேடைகளில் வசைபாடி தமது இருப்பையும் கட்சியின் இருப்பையும் உறுதிப்படுத்திக் கொண்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. இது மக்களை ஏமாற்றும் யுக்தியாகவே கருத வேண்டியுள்ளது

ஆனால் ஜனாதிபதி தேர்தலில் மாத்திரம் ஒற்றுமைப்பட்டு ஓர் அணியில் நின்று கூலிக்கு மாரடிப்பது போல் முந்தியடித்துக் கொண்டு மக்களின் விருப்பு வெறுப்புகளை அறியாது தாம் விரும்பிய கட்சிக்கு ஆதரவு வழங்குவதாக அறிக்கை விடுவது எந்த வகையில் நியாயமாகும்.

இவ்வாறான அரசியல் தலைவர்களின் செயற்பாடு களுக்கு சிறுபான்மை சமூகத்திலுள்ள பொது மக்கள் சிறந்த பாடத்தை இத்தேர்தலில் புகட்ட முன்வர வேண்டும்.

இத்தேர்தலில் ஒரே மேடையில் ஒற்றுமையாக அமர்ந்திருக்கும் அரசியல் தலைமைகள் ஏனைய தேர்தர்களிலும் ஒன்றாக இணைவதன் ஊடாக சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளை வென்று கொடுக்க முன் வருவார்களா?

editorml21@gmail.com

# EAST லீடர்

## சஜித்தின் வெற்றிக்காக சம்மாந்துறையில் பல்வேறு வேலைத் திட்டங்கள்

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை பிரதேசத்தில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான தேர்தல் குழுக்களின் கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் சம்மாந்துறை நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி செயலாளர் மன்சூர் ஏ.காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, உச்ச பீட உறுப்பினரும், அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளருமான ஏ.சீ.சமால்டீன், உயர்பீட உறுப்பினரும் முன்னாள் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.எம்.சௌபீர் உயர்பீட உறுப்பினர் அஸீஸ், மத்தியகுழு செயலாளர் அசாருதீன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ். நழீம், இளைஞர் அமைப்பாளர் அர்சாத் இஸ்மாயில், கிளை தலைவர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.



இதன்போது தபால் மூலம் வாக்களிக்க உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான ஸ்ரீ முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வழங்கியுள்ள விசேட கடிதத்தை வழங்குதல், ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டங்கள், வட்டார ரீதியான கருத்தரங்குகள், வட்டார ரீதியான காரியாலங்கள் திறத்தல், வட்டார ரீதியான வீடு வீடாகச் செல்லும் செயற்பாடுகளை முன்னெடுத்தல், சம்மாந்துறை பிரதேசத்தில் இது வரைக்கும் புனரமைக்கபடாமல் உள்ள கிளைகள், இளைஞர் கிளைகள், மகளிர் கிளைகளையும் புனரமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## குதிரை மூலம் ரணிலுக்காக பிரச்சாரம் செய்யும் அதாவுல்லாஹ் எம்.பி



(பாறுக் ஷிஹான்)

கொழும்பில் இருந்து இரண்டு உயர் ரக வெள்ளைக் குதிரைகள் தற்போது அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள பிரதான வீதிகளில் உலா வருகின்றன.

மேலும் ரணில் விக்ரமசிங்கவின் பிரசார கூட்டங்கள் இடம்பெறுகின்ற இடங்களை மையப்படுத்தி குறித்த இரு குதிரைகளும் காட்சிப்படுத்தப்பட்டு வருவதுடன் வித்தியாசமான முறையில் மக்களிடம் ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக பிரசாரம் செய்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ்வின் தேசிய காங்கிரஸ் கட்சியின் சின்னம் குதிரை என்பதுடன் இம்முறை இடம்பெறும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவினை அவர் ஆதரிப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மருதமுனையில் புதிய கட்டட தொகுதிக்கான ஆரம்பப் பணிகள் முன்னெடுப்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)



மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் வளாகத்தில் பள்ளி வாசலுக்கான பெண்கள் தொழுகை அறை, வுழு செய்யும் இடம், களஞ்சிய அறை, குளியலறை, சமையலறை, மலசலகூடத் தொகுதிகளை உள்ளடக்கியதான கட்டட தொகுதிக்கான ஆரம்பப் பணிகளை முன்னெடுக்கும் நிகழ்வு பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை தலைவரும் விவசாயம், விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான எம்.எஸ்.அபுல் கலீஸ் முன்னிலையில் கட்டட குழு தலைவர் எம்.ஐ.ஏ. பரீட் தலைமையில் நடைபெற்றது.

பள்ளிவாசல்களை அழகு படுத்துதல், மஹல்லா வாசிகளுக்கு தேவையான வசதி வாய்ப்புகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து மருதமுனை ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவரும், மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளருமான எப்.எம்.அஹமது அன்ஸார் மௌலானா விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசாரத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மருதமுனையின் வரலாற்றில் பள்ளிவாசல்களின் வகிபங்கு அதற்கு பிரதேச மற்றும் பிரதேசத்திற்கு வெளியில் வாழும் மக்கள் வழங்கி வரும் பணிகள் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார்.

விசேட துஆ பிரார்த்தனையை பள்ளிவாசலின் பேஷ் இமாம் அல்-ஹாபிழ் மௌலவி ஏ.ஆர்.பைசல் கியாஸ் நிகழ்த்தினார். இதனை அடுத்து பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், மரைக்கார்மார், குடி வழித் தலைவர்கள், மஹல்லா வாசிகள் என பலரும் ஆரம்ப பணிகளுக்கான கட்டுமான வேலை திட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மட்டு. கல்லடி சிவானந்தா முதலாவது கிண்ணத்தை சுவீகரித்தது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையில் திருகோண மலையில் இடம்பெற்ற சொற்சமர் போட்டியில் தற்போதய கையடக்கத் தொலைபேசிப் பாவனை மாணவர்களுக்கு நன்மை பயக்கும் எனும் மகுடத்தில் வாதிட்ட மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி மாணவர் அணி வெற்றி பெற்று முதலாவது வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது. இந்நிகழ்வில் வெற்றியீட்டிய சிவானந்தா அணிக்கு திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரி அதிபர் எஸ்.கணேசலிங்கம் மற்றும் மட்டக்களப்பு, கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரி அதிபர் எஸ்.தயாபரன் ஆகியோர் இணைந்து இந்த கிண்ணத்தினை வழங்கி வைத்தனர்.

ஒவ்வொரு வருடமும் நடைபெறவுள்ள இந்த சொற்சமர் நிகழ்வில் மூன்று முறை தொடர்ச்சியாக வெற்றி பெறும் கல்லூரிக்கு இந்த சவால் கிண்ணம் சொந்தமாகும்.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



(எம்.ஏ.முஹமட்)

திருகோணமலை மாவட்ட சமாதான நீதவானாக கிண்ணியா குறிஞ்சாக்கேணியைச் சேர்ந்த அப்துல் கபூர் முகம்மது இன்சாத் திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம். கணேஷராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

## 158 ஆது தேசிய பொலிஸ் தினத்தை முன்னிட்டு விஷேட துஆ பிரார்த்தனை

(உமர் அறபாத் )

இலங்கையின் 158ஆது தேசிய பொலிஸ் தினத்தினை சிறப்பிக்கும் வகையில் விஷேட துஆ பிரார்த்தனை நிகழ்வு (03) செவ்வாய்கிழமை ஏறாவூர் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவர் எஸ்.எல்.எம். நழீம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியந்த மற்றும் ஏறாவூர் பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி ஹர்சடி சில்வா உட்பட பொலிஸ் நிலையத்தின் உப பரிசோதகர்கள், பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், உலமாக்கள், பள்ளிவாயல் நிருவாகிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இலங்கை பாதுகாப்பு துறையினரின் நீண்ட ஆயுள் வேண்டியும் நாட்டுக்காக நல்ல பல சேவைகள் தொடரவும் விஷேட பிரார்த்தனை நிகழ்வுகள் இதன்போது இடம்பெற்றன.

# பெண்ணின் உரிமை சமூகத்தில் பேசுபொருளாகின்றது

## பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ்

(பாறுக் ஷிஹான்)



எமது சமுதாயத்தில் பெண்கள் மிக முக்கிய பங்காற்றி வருகிறார்கள். ஆகவே பெண்ணினது உரிமையும் மனித உரிமையே என்பதால் சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பங்கு பற்றி நாம் அக்கறை கொள்வதோடு, அவர்களின் முன்னேற்றத்திற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு. எனவே பெண்ணின் உரிமை சமூகத்தில் பேசுபொருளாகின்றது என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

முஸ்லிம் ஆராய்ச்சி செயல் முன்னணியினால் தமிழ், முஸ்லிம் யுவதிகளுக்கான பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வு செவ்வாய்க் கிழமை (3) மருதமுனையிலுள்ள முன்னணியின் அலுவலகத்தில் இணைப்பாளர் யூ.எல்.ஹபீலா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது,

உலக சனத்தொகை புள்ளி விபரங்களின்படி, பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எல்லாவிதங்களிலும் ஆண்களைப் போலவே அறிவாற்றல்மிக்கவர்களாக, சிறந்த நிருவாகிகளாக, ஆராய்ச்சியாளர்களாக, அரசியல்வாதிகளாக பெண்கள் இன்று தங்களை வளர்த்துக் கொண்டுள்ளனர் என்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம்.

இன்றைய பொருளாதார நெருக்கடி காலத்தில் மணமுடித்த கணவன் அநாதரவாய் மனைவியையும், பிள்ளைகளையும் விட்டுச் சென்றுள்ளதால் பிள்ளைகளைப் பராமரிக்க முடியாமல் வாழ்க்கைச் சுமைகளை சுமந்து கண்ணீர் விட்டழுகின்ற பெண்களின் நிலை பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.
முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டத்திலும் பெண்களைப் பற்றிய மனப்பாங்குகள் சட்ட ஏற்பாடுகளில் செல்வாக்கு செலுத்துவதைக் காணலாம்.

தற்போதைய காலகட்டத்தில் இளம் யுவதிகள் கையடக்கத் தொலைபேசிகளை தவறாக பயன்படுத்துவதினால் குடும்ப ரீதியாகவும், மனரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

குடும்ப வன்முறை தடுத்தல் சட்டத்தின் மூலம் தீர்வுகள் தெளிவாக இருந்துள்ள போதிலும் அதிகமானவர்கள் அச்சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க விரும்புவதில்லை. திருமண விடயத்திலும், விவாகரத்து விடயத்திலும். பராமரிப்பு விடயத்திலும் பொதுச் சட்டமும், முஸ்லிம் சட்டமும் எத்தகைய விடயப் பரப்புக்களைக் கொண்டுள்ளது என்பதை அனைவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும். இதற்காக இளம் யுவதிகள் சட்டம் பற்றிய அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பாசறை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு, காத்தான்குடி, காங்கேயனோடை அல் அக்ஸா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் உயர்தர வகுப்பு மாணவ மாணவிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை வழிகாட்டல் ஆலோசனைப் பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரபல வளவாளரும் உளவளத் துணையாளருமாகிய மனூஸ் அபூபக்கர் கலந்து கொண்டு மாணவத் தலைவர்களாக செயற்படும் போது எவ்வாறான தலைமைத்துவப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பில் மிக விரிவாக கலந்துரையாடப் பட்டதோடு,

செயற்பாட்டு அடிப்படையில் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கான பயிற்சியும் வழங்கி வைக்கப்பட்டது.

# முற்றிலும் இலவசமான ஆயுர்வேத மருத்துவ முகாம்

(மட்டு - துஷாரா)



மட்டக்களப்பு மண்முனை வடக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்க அனுசரணையின் கீழ் சத்துருக்கொண்டான் சுதேச ஆயுள்வேத மத்திய மருந்தகத்தினால், மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொக்குவில் பிரதேச மக்களுக்கு முற்றிலும் இலவசமான ஆயுர்வேத மருத்துவ முகாமொன்று (03) கொக்குவில் பல்தேவை கட்டடத்தில் நடைபெற்றது.

கொக்குவில் பிரதேச மக்களின் தேவை கருதியும், அவர்களின் ஆரோக்கியமான வாழ்வை கருத்திற்கொண்டு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.சிறிகாந்தின் வேண்டுகோளுக்கிணங்க, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலின் அனுமதியுடன், சத்துருக் கொண்டான் ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி எஸ்.சஜிதா தலைமையில் இந்த இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த இலவச மருத்துவ முகாமில் பல நூற்றுக் கணக்கான பொதுமக்கள் வருகை தந்து தங்களது நோய் தொடர்பில் மருத்துவ ஆலோசனைகளையும் மருந்துகளையும் பெற்றுக் கொண்டனர்.

இந்த மருத்துவ முகாமில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.சிறிகாந், மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் சதாகரன் சுபா, சமுர்த்திப் பணிப்பாளர் வி.பிரைசூடி, மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சத்துருக் கொண்டான் ஆயுர்வேத மத்திய மருந்தக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது ஜனாஸா அமைப்புக்கு உதவி செய்ய வேண்டுகோள்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது ஜனாஸா அமைப்புக்கு ஜனாஸா வாகனமொன்றைக் கொள்வனவு செய்ய உதவி புரியுமாறு ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்த வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

சாய்ந்தமருது ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை அமைப்பு சாய்ந்தமருது பிரதேசத்தில் இடம்பெறும் ஜனாஸாக்களை இரவு, பகல் பாராது மழை, வெயில் என்று இல்லாமல் எதுவிதமான எதிர்பார்ப்புகளும் இன்றி, மறுமைக்கான நன்மையை நோக்கிய பணியாக அமைப்பின் தொண்டர்களால் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது இந்த ஜனாஸா அமைப்புக்கு முக்கியமான ஒரு தேவைப்பாடாக ஜனாஸா வீடுகளுக்கு கதிரைகள், படங்குகள், போக்கஸ் லைட், ஜனாஸா குளிப்பாட்டும் தட்டு, துஆ வோட், சந்துக்கு, மஞ்சி போன்றவற்றை கொண்டு செல்வதில் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். குறிப்பாக, இரவு நேரத்தில் இது இரட்டிப்பு சிரமத்தை ஏற்படுத்துகிறது.

எனவே, இப்பொருட்களை ஜனாஸா வீடுகளுக்கு அவசரமாகக் கொண்டு செல்வதற்காக வட்டா ரக (வடி) வாகனம் ஒன்றினை கொள்வனவு செய்துகொள்ள சுமார் ரூபாய் 35 இலட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அவசரமாகக் கொள்வனவு செய்து கொள்ளும் வகையில் தனவந்தர்களிடமும் நல்லுள்ளம் கொண்டவர்களிடமும் உதவியை நாடியுள்ளனர்.

உதவி செய்ய விருப்பம் உள்ளவர்கள் எமது கீழ் வரும் வங்கிக் கணக்கில் வைப்பு செய்ய முடியும். அல்லது நேரடியாக எமது காரியாலத்திற்கு வந்து அன்பளிப்புக்களை கொடுத்து அதற்கான பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

Janaza Welfare People's Forum,
Amana Bank, Kalmunai,
A/C. 011-053863-0001.

People's Bank Sainthamaruthu.
A/C 338-2001-5001-7865




திருமலை குச்சவெளி அந்-நூரியா கனிஷ்ட பாடசாலையில் இரண்டு வகுப்பறைக் கட்டிட தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அதிபர் எம்.கே.முபீன் தலைமையில் நடைபெற்றது .

(படம் : சைபுல் ஹபீஸ்)



கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய தரம் 04 மாணவர்களின் பல்வேறு சமய, கலாச்சார ஆடைகளையும் பண்டிகைக்கால உணவுகளையும் அறிந்து கொள்வோம் எனும் கருப்பொருளுடன் கூடிய நிகழ்வு பாடசாலை அதிபர் எம்.ஐ.அப்துல் றஸாக் தலைமையில் ஆரம்பப் பிரிவு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

(படம் : அஸ்ஹர் இப்றாஹிம்)

# பொத்துவில் ஆதார வைத்தியசலையில் கலந்துரையாடல்

(றியாஸ் ஆதம்)

பொத்துவில் ஆதார வைத்தியசலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடலொன்று (04) பொத்துவில் ஆதார வைத்தியசலையில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகள், இலங்கை சுற்றுலா அதிகார சபையின் உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மெலிண்டன் கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பொத்துவில் மற்றும் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைகளின்



வைத்திய அத்தியட்சகளான டாக்டர். நித்தின் ரணவக்க, டாக்டர். ஏ.பி.மசூத், பிராந்திய கண்கானிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர். எம். சீ.எம்.மாஹிர், கிழக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் பொறியியலாளர் ஏ.எம்.ஹக்கீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி வசதிகள் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் அறுகம்பே பிரதேசத்துக்கு வருகைதரும் உல்லாசப் பயணிகள் பெரிதும் நன்மையடைவதுடன், எமது நாட்டுக்கும் பெரும் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்ற ஒரு நிறுவனமாகவும் பொத்துவில் வைத்தியசாலை திகழும்.

இலங்கை சுற்றுலா அதிகார சபை குறித்த கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் விடுதி வசதியினை ஏற்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




சாய்ந்தமருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயத்திற்கு கல்முனை சைனிங் ஸ்டார் அமைப்பினால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக இரு கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அதிபர் எம். எஸ்.எம். ஆரிப் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், சைனிங் ஸ்டார் அமைப்பின் சார்பாக அதன் ஸ்தாபகத் தலைவி திருமதி பஸீரா றியாஸ் மற்றும் அதன் உறுப்பினர்களான திருமதி றிஸ்னா சுபைர் மற்றும் திருமதி பெரோஷா காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டு கணனிகளை வழங்கி வைப்பதனை காணலாம்.

(படம் : எம்.எஸ்.எம். ஸாகிர்)



தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் தமிழ் சங்கம் மற்றும் சமூகவியல் சங்கம் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்த புத்தளம் புழுதிவயல் பைஸானா பைரூஸ் எழுதிய **'டுவன்டி ப்ளஸ் 20+'** கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு, கலை கலாசார பீடத்தின் கேட்போர் கூடத்தில் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டார்.

(படம் : நூருல் ஹுதா உமர்)

# இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(ஸைபுல் ஹபீஸ்)

நற்பிட்டிமுனை அக்ஷயன் 2001 சமூக சேவைகள் அமைப்பு இவ்வருடம் புலமைப் பரிசில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் நன்மை கருதி ஏற்பாடு செய்துள்ள இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை (07) நற்பிட்டிமுனை அல் - அக்ஷா மத்திய மகா வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு கேட்போர் கூடத்தில் அதன் தலைவர் ரீ.எம். றியாஸ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

அட்டாளைசேனை பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளரும், அமைப்பின் மகளிர் அணியின் தலைவியுமான ஏ.எம்.கஸ்பியா வின் வழிகாட்டலில் இடம் பெறும் இக்கருத்தரங்கிற்கு வளவாளராக பிரபல ஆசிரியர் எம்.ஐ.முறாத் கலந்து கொண்டு மாணவர்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கவுள்ளார்.

நற்பிட்டிமுனை அக்ஷயன் 2001 சமூக சேவைகள் அமைப்பானது குறுகிய காலத்தில் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டங்களை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது குறிப்பிடத்தக்கது.

# சவூதி அரேபியத் தூதுவருடன் முஸ்லிம் திணைக்களப் புதிய பணிப்பாளர் சந்திப்பு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்-கஹ்தானியை நல்லெண்ண சந்திப்பாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் மற்றும் முஸ்லிம் திணைக்கள உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம். முப்தி முர்ஸி ஆகியோர் தூதுவரின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ அலுவலகத்தில் திங்கட்கிழமை (02) சந்தித்தனர்.

இதன்போது முக்கிய பல விடயங்கள் பற்றி பேசப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



கல்முனை ஸாஹிரா தேசியக்கல்லூரியில் இவ்வருடம் க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு தோற்றி பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களின் ஒன்றுகூடலும், பாடவிதான மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமைகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் கல்லூரி கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் கூட்ட மண்டத்தில் இடம்பெற்றது.

(படம் : அஸ்ஹர் இப்றாஹிம்)

# ஜனாதிபதி தேர்தல் - 2024



## ராஜபக்ஷ அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட நபர்களே இப்போது ரணில் விக்கிரமசிங்க பக்கம் உள்ளனர்

(சதீஸ்)

வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்து பகுதி மக்களும் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து நிற்கின்றனர். ராஜபக்ஷ அரசாங்க ஆட்சியில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட நபர்களே இப்போது ரணில் விக்கிரமசிங்க பக்கம் தாவியுள்ளனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு தொகுதி பிரதம அமைப்பாளர் ரி.தயானந்தன் தெரிவித்தார். சனிக்கிழமை (31) அன்று ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு தொகுதி பிரதான காரியாலயத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இக்கருத்தினை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், ஊழல்வாதிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் தலைவராக இப்போது ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார். இவரது ஆட்சி இப்போது ரணில் ராஜபக்ஷ ஆட்சி என்றே எங்களுடைய மக்கள் கருதுகின்றனர். இவ்வாறான உண்மையை




தென்னிலங்கை மக்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர்.

மொட்டு கட்சியில் இருந்து ஊழலற்ற, நேர்மையான நபர்களை மட்டுமே சஜித் பிரேமதாஸ அழைத்துள்ளார்.

எதிர்கட்சியில் இருந்து கொண்டு இந்த நாட்டிலே பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும், சாலை போக்குவரத்து சபைக்கும் பல உதவிகளை சஜித் பிரேமதாஸ செய்து கொண்டு வருகின்றார்.

இந்த நிலையில் இவர் ஜனாதிபதியானால் மேலும் பல அபிவிருத்திகளை முன்னெடுப்பார் என்பதில் ஐயமில்லை.

## இனவாதம் பேசி வாக்குகளை கொள்ளை அடிப்பதை தமிழ், முஸ்லிம் கட்சிகள் நிறுத்த வேண்டும்

(பாறுக் ஷிஹான்)

தமிழ் தேசிய கூட்டமைப்பும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் எப்போதும் கணவனும் மனைவியும் போன்று தான் இருப்பார்கள். தேர்தல் வந்ததும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முஸ்லிம்களுக்கு எதிராக பேசுவார்கள். முஸ்லிம் காங்கிரஸ் தமிழருக்கு எதிராக பேசுவார்கள். இவ்வாறாக பேசி தத்தமது பக்கம் உள்ள இனரீதியாக சிந்திக்கின்ற மக்களின் வாக்குகளை கொள்ளை அடிப்பதை நாம் காண்கின்றோம் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி தவிசாளரும் உலமா கட்சி தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அண்மையில் கல்முனையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் குறிப்பிட்டதாவது

முஸ்லிம் சமூகம் உசுப்பேத்தும் அரசியலுக்கு அடிமையாக இருப்பதை காண்கின்றோம். தேர்தல் அல்லாத காலங்களில் இனவாத அரசியலை விரும்ப மாட்டார்கள். இன ஐக்கியம் என்பார்கள். ஆனால் தேர்தல் காலங்களில் வேண்டுமென்றே மக்களை உசுப்பேற்றி தங்களுக்கு வாக்குகளை பெறுவதற்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் இனவாதத்தை முஸ்லிம்கள் மத்தியில் விதைத்து பிற இனவாதிகளை கொண்டு வந்து அவர்களை பேச வைத்தாவது இனவாதத்தை உருவாக்குவதை காண்கின்றோம்.

எனவே தான் இவ்வாறான அரசியலை செய்ய வேண்டாம் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினை கேட்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

## கெட ஓயா திட்டம் நிறைவேற்றப்படும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )




பசியோடு இருந்த நாட்டு மக்களுக்கு உணவு வழங்கியமை இன்று குறையாக சொல்கிறார்கள். பசியோடு இருந்த மக்களுக்கு உணவு வழங்கியது பிழையா? பொத்துவில் கெட ஓயா திட்டம் நிச்சயம் அது பூர்த்தியாகும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களை நாட்டில் மீண்டும் ஜனாதிபதியாக்கி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான இயலும் ஸ்ரீ லங்கா மாபெரும் பிரச்சாரக் கூட்டம் பொத்துவில் ஜலால்தீன் சதுக்க மைதானத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். எம். முஷாரப் தலைமையில் அண்மையில் (23) நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

இலங்கையர் என்ற அடிப்படையில் நாம் நன்றாக சிந்திக்க வேண்டும். 2022 ஆம் ஆண்டு மே, ஜூன், ஜூலை மாதம் நாட்டு மக்கள் பசியோடு இருந்தார்கள் உணவு இல்லை, பெற்ரோல் இல்லை, கேஸ் இல்லை, மருந்து பொருட்கள் இல்லை என முழு நாடும் வங்குரோத்து நிலையை அடைந்து பொருளாதாரத்தில் பின்னின்றோம். சாப்பிடுவதற்கு இரண்டு போகங்கள் வேளாண்மை செய்ய முடியாமல் இருந்தோம். உல்லாச பயணிகள் நாட்டுக்கு வரவில்லை. இந்த இக்கட்டான நிலையிலேயே நாட்டை நான் பாரமெடுத்தேன். நாட்டின் தலைவர் என்ற வகையில் நாட்டு மக்கள் பசியோடு இருப்பதை, கவலையோடு இருப்பதை நான் ஒருபோதும் விரும்பமாட்டேன். எந்த நேரமும் மக்களின் கஷ்டங்களை அவதானித்துக் கொண்டே இருக்கின்றேன். அன்று எனது கடமை இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க வேண்டும் என்ற ஒரே எண்ணமாக இருந்தது. தனி உறுப்பினராக இருந்தாலும் இந்த பாரிய பொறுப்பை, சவாலை நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டேன். இதன் காரணமாக 2023, 24களில் இரண்டு போகங்களும் வேளாண்மை செய்ய முடிந்திருக்கிறது 2024ல் மாரி போகமும் சிறப்பாக செய்யப்பட்டிருக்கிறது. வெற்று காணிகள் விவசாயம் செய்யாமல் கிடப்பதற்கு நான் இடமளிக்கவில்லை.

இன்று என் மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுக்கள் நான் இந்த பதவியை ஆசைப்பட்டு எடுத்ததாகவும் சஜித் பிரேமதாசாவின் பதவியை நான் எடுத்ததாகவும் சொல்கிறார்கள். மக்கள் துக்கத்தோடு கஷ்டத்தோடு வாழ்ந்தது அவருக்குத் தெரியவில்லையா? அவர் ஏழை மக்களை பற்றி பேசிக் கொண்டிருக்கின்றார். அன்று ஏழை மக்களின் கஷ்டங்களையும் துன்பங் களையும் உணர்ந்திருந்தால் பிரதமர் பதவியை, ஜனாதிபதி பதவியை எடுத்திருக்கலாம். எனவும் தெரிவித்தார்

## ஹக்கீம் ஆதரவளித்த எவரும் வென்றதாக வரலாறு இல்லை

(நூருல் ஹுதா உமர்)




எதிர்வரும் 21ம் திகதி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தோல்வியை தழுவ போகிறார் என்பதை தெரிந்து கொள்ள பல காரணங்கள் தேவையில்லை. ஒரே ஒரு காரணம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் எப்போது சஜித்துக்கு ஆதரவாக நின்று அவரை வெல்ல வைக்க போகிறேன் என்று கூறினாரோ அந்த நிமிடமே அவர் தோற்று விட்டார் என ஸ்ரீ லங்கா ஜனநாயக கட்சி தலைவர் கலாநிதி அன்வர் எம். முஸ்தபா தெரிவித்தார்.

சம்மாந்துறையில் இடம்பெற்ற இயலும் ஸ்ரீ லங்கா பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு

உரையாற்றுகையில், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடைய தலைவர் 2000 ஆம் ஆண்டிலிருந்து எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு கொடுக்கிறாரோ அந்த வேட்பாளர் படுதோல்வியையே சந்தித்து வந்துள்ளார். தபால் வாக்களிப்புக்கு பின்னர் வந்து ஆதரவளித்த நல்லாட்சி அரசை தவிர மற்ற எல்லா அரசாங்கமும் தோற்றே இருக்கிறது.

மக்கள் ஜனாதிபதி ரணிலின் பக்கம் இருப்பதனால் இந்த முறை சஜித் பிரேமதாசா தோற்கின்றார் என்பது உறுதியாகியுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி நாட்டை சுபீட்சத்துக்கு கொண்டு செல்ல வேண்டுமா? அல்லது வங்குறோத்து நிலைக்கு கொண்டு செல்ல வேண்டுமா?

என்பது தொடர்பான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்ற நிலையில் இந்த சம்மாந்துறை மண்ணில் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருக்கின்றோம் என்று தெரிவித்தார்.

## தேசிய மக்கள் சக்தி- சாய்ந்தமருது பிரதேச கல்வியியலாளர்கள் சந்திப்பு

(பாறுக் ஷிஹான்)

ஜனாதிபதி வேட்பாளர் அனுர குமார திசாநாயக்கவை ஆதரித்து நாடு அனுரவோடு எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கை விளக்க சாய்ந்தமருது பிரதேச கல்வியியலாளர்கள் சந்திப்பு மாளிகைக்காடு தனியார் வரவேற்பு மண்டபத்தில் (01) நடைபெற்றது.
தேசிய மக்கள் சக்தியின் அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் விவசாய கொள்கையின் திட்டமிடலுக்கான உபகுழுவின் ஒருங்கிணைப்பாளரும் தேசிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் அமைப்பின் குழு உறுப்பினரு மான ஜீ.வி.எச்.கோட்டாபய, தேசிய மக்கள் சக்தியின் அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் அம்பாறை நகரசபை முன்னாள் உறுப்பி- னருமான இந்திக்க விஜய விக்கிரம ஆகியோர் சிறப்புரை யாற்றினர். இதன்போது, சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள் உட்பட மேலும் பலர் கலந்து கொண்டனர்.

# சஜித்தின் 13 ஆம் திருத்தமும் கிழக்கு முஸ்லிம்களும்





கலாநிதி றவூப் ஸெய்ன்

சஜித்தின் தேர்தல் பிரச்சார உரைகள் குறித்த விவாதங்கள் மேற்கிளம்பியுள்ள நிலையில் அவரது தலைமைத்துவ பண்புகள் திறன்கள் ஆளுமைகள் பற்றி கடும் விமர்சனங்கள் ஊடகங்களில் வெளிவந்த வண்ணமுள்ளன. கூட்டுப்பொறுப்பு கூட்டு முயற்சி கட்சிசார் முடிவு அணி உணர்வு என்பவற்றைத் தாண்டி “நான்” “என் ” என்று ஏன் அவர் முழங்குகிறார் என நேற்றைய Daily FT இல் ஒரு கட்டுரை வந்துள்ளது. அவரது “எல்லோருக்கும் வெற்றி” என்ற கொள்கைப் பிரகடனமும் அதிலுள்ள வாக்குறுதிகளும் இன்றைய இலங்கையில் சாத்தியமில்லை என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

அது ஒரு புறமிருக்க, இன்று சஜித்துடன் கூட்டுச் சேர்ந்துள்ள பாட்டாளி சம்பிக்க 1990 களிலிருந்து இன்றுவரை முஸ்லிம் எதிர் இனவாதத்தைக் கக்கி வருபவர். அல்லாஹு அக்பர் என்ற அவரது முதல் நூலில் இருந்து தொடங்கும் முஸ்லிம் விரோத பிரச்சாரம் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கு குறைவே இல்லை. 2019 தாக்குதலை தொடர்ந்து இந்த நாகம் சீறிப்பாய்ந்தது. இஸ்லாமிய தீவிரவாதத்தை இல்லாதொழிப்பதற்கான ஆறு அம்சத்திட்டம் அவர் முன்வைத்த படு கீழ்த்தரமான முஸ்லிம் விரோத பிரச்சாரமாகும். இந்த நாட்டில் முஸ்லிம் சிங்கள பகை முரண்பாடுகளையும் மோதல்களையும் ஊக்குவிக்கும் உள்நோக்கத்துடன் வஞ்சகமாக அவர் ஆடிய நாடகங்கள் நாடறிந்ததே.

முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் றிஷாத்தின் மக்கள் காங்கிரஸ் கட்சிகளையும் ஹக்கீம், றிஷாத் ஆகியோரையும் முஸ்லிம் தீவிரவாதத்தின் குறி காட்டிகளாக சிங்களப் பெரும்பான்மை மக்களின் எதிரிகளாக முன்னிறுத்திய சம்பிக்க இன்று சஜித்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளமை பாரிய சந்தேகத்தை உருவாக்குகின்றது. துரதிஷ்டம் இன்று ஒரே அரசியல் மேடையில் ஒரே அணியில் ஹக்கீமும் றிஷாத்தும் சம்பிக்கவும் உட்கார்ந்திருக்கிறார்கள்.

இத்தகைய சந்தர்ப்பவாத நரிக்கூட்டுத்தனம் அரசியலில் ஒன்றும் புதிதல்ல. ஆச்சரியமானதுமல்ல என்பதை முஸ்லிம் சிவில் சமூகம் உணர்ந்து கொண்டால் சரி. அரசியல்வாதிகள் அவனவன் தேவைக்காக யாருடனும் அவ்வப்போது கூட்டுச்சேருவான் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முஸ்லிம் விரோத பேரினவாதத்தின் மூன்றாம் அலை 2012 இல் ஆரம்பித்தது. தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரத்துடன் ஆரம்பித்த அந்த இனவாதப் பிரச்சாரம் அதற்குப் பிந்திய 12 ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கெதிரான இனக்கலவரங்களாகவும் வெடித்ததை யாரும் இங்கே இலகுவில் மறந்து விடவில்லை. இதில் முக்கிய பங்கு கொண்டவர் தலைமழித்த ஞானசாரர்.

இந்த நிமிடம் வரை சிறையிலிருந்து வெளிவந்த கையோடு அந்த பாஷிஸ்ட் மீளவும் இனவாதம் பேசுகிறார்.

இத்தனை காலம் சஜித் பிரேமதாஸ ஞானசாரர் குறித்து ஒரு வார்த்தையும் பகிரங்கமாகப் பேசவில்லை அதன் மர்மம் என்ன? மீண்டும் இந்த அஞ்ஞானம் ஆட்டம் போட ஆரம்பித்தால் அதைத் தடுக்கும் தில்லு சஜித்துக்கு இருக்குமா?

சஜித் தான் யாருடனும் எந்த ஒப்பந்தமும் செய்யவில்லை. எங்களுக்குள் டீல் இல்லை என்கிறார். ஆனால் முஸ்லிம் காங்கிரஸும் மக்கள் காங்கிரஸும் முஸ்லிம் சமூகம் சார்பாக சஜித்துடன் ஒப்பந்தம் செய்துள்ளதாக பீத்தி வருகிறார்கள். இதிலுள்ள சூட்சுமம் புதிராகவே தொடர்கிறது. தாம் தமது மக்கள் சார்பாக முன்வைத்துள்ள நிபந்தனைகள் வேண்டுகோள்கள் என்ன என்பதை இவர்கள் இதுவரை வெளிப்படையாக புலப்படுத்தவில்லை.

கள்ளத்தனமாக வஞ்சகத்தனமாக சஜித்துடன் ஒழித்து விளையாடும் இந்த எய்ப்பாளர்களிடம் வெளிப்படைத்தன்மை மண்ணளவும் இல்லாமல் போனதேன் என்பது பாரிய சந்தேகத்தையே தோற்றுவிக்கிறது. சம்பிக்க சஜித்துடன் இருக்கும்வரை முஸ்லிம் மக்களின் எந்தக் கோரிக்கைக்கும் இடமிருக்காது என்பது உறுதி.

அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் சஜித்துக்கு ஆதரவு வழங்கப் போவதாக பகிரங்கமாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து முஸ்லிம் அரசியல்வாதிகளின் கையாலாகாத் தனம் இன்னும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. சஜித் வட மாகாண கூட்டங்கள் அனைத்திலும் காணி பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று உறுதியாக கூறி வருகிறார். மறுபக்கம் தமிழ்த் தேசியக் கூட்டணி பலமுறை சஜித்துடன் பேச்சுவார்த்தை நடாத்திய பின்னரே ஆதரவு தருவதாக அறிவித்துள்ளது.

இன்று கிழக்கில் வாழும் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் கிழக்கு தனியான சுதந்திரமான ஒரு மாகாணமாக இருக்க வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். அதுவே அவர்களின் அடிப்படை அரசியல் அபிலாஷை. கடந்த முப்பதாண்டு காலப்போரில் அவர்களுக்கு தமிழ் தரப்பால் இழைக்கப்பட்ட அநீதிகள் கொடுமைகள் குறித்து அவர்கள் மிகவும் தெளிவான நினைவாற்றலுடன் இருக்கிறார்கள். இலங்கையின் அனைத்து மாகாணங்களும் சுயாதீனமாகவும் தனித்தும் இயங்கும் நிலையில் வடக்குடன் கிழக்கு மட்டும் ஏன் இணைக்கப்பட வேண்டும்? அந்த இணைப்பினால் ஏன் முஸ்லிம் மக்களுக்கு இன ரீதியான புறக்கணிப்பும் பாதிப்பும் ஏற்பட வேண்டும்?

இன்று திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வாழும் பெரும்பான்மை முஸ்லிம் மக்கள். ஒட்டு மொத்த கிழக்கு மாகாணத்திலும் முஸ்லிம்களே பெரும்பான்மை. அவர்களுக்கு ஒரு முஸ்லிம் முதல்வரை ஏற்காத தமிழ் தலைமைகள் இணைந்த வட கிழக்கில் முஸ்லிம்களை மென்மேலும் இனச்சிறுபான்மையாக்கி தொழில் நிலம் நிருவாகம் எல்லாவற்றிலும் புறமொதுக்கும் ஒரு சூழ்ச்சித்திட்டத்திற்கு ஹக்கீமும் றிஷாதும் சோரம் போவது ஆச்சரியத்துக் குரியதல்ல. ஏனெனில் றிஷாத் வடக்கைச் சேர்நதவர். ஹக்கீம் மலை நாட்டைச் சேர்ந்தவர். இது குறித்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டியவர்கள் கிழக்கு முஸ்லிம்களே.

கிழக்கு முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்டு இன்று சஜித்துடன் கூட்டுச்சேர்ந்துள்ள நல்லாட்சிக்கான தேசிய முன்னணி NFGG இடம் நாம் கேட்க வேண்டிய கேள்விகள் ஆயிரம் உள்ளன. தாம் தான் பெரிய கொள்கைவாதிகள் போலவும் அரசியல் நிபுணர்கள் போலவும் அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்களே ஒழிய, வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியோ காணி பொலிஸ் அதிகாரம் குறித்தோ அவர்கள் தமது தெளிவான நிலைப்பாட்டை இன்னும் வெளிப்படுத்தவில்லை.

அவர்கள் ஒரு பலமான அரசியல் கட்சி இல்லை. பெருமளவு மக்கள் ஆதரவு அவர்களுக்கு இல்லை என்பது உண்மையாயினும். அவர்கள் பாரம்பரிய முஸ்லிம் கட்சிகளிலிருந்து மாறுபட்ட அடையாளம் தமக்குள்ளது என்று வாதிடுபர்கள். ஆக அவர்களுக்கு அதிகராப்பரவலாக்கம் குறித்த கிழக்கு முஸ்லிம்களின் நிலைப்பாடுபற்றிய ஒரு தெளிந்த கொள்கை அவசியம்.

ரணில் சரிப்படாது அநுரவோ நாமலோ சரிப்படாது எனவே நாம் சஜித்தை ஆதரிக்கிறோம் என்ற பொதுப்புத்திக்கு அப்பால் ஏன் நாம் சஜித்தை ஆதரிக்கிறோம்? அவருடன் முஸ்லிம்கள் சார்பாக இப்படியொரு ஒப்பந்தத்தைப் பேணுகிறோம் என்பதை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும். சஜித் ஜனாதிபதியானால் தமிழர்களுக்காக வடக்கு கிழக்கு இணைக்கப்படுமானால் காணி பொலிஸ் அதிகாரம் தமிழர்களின் கையில் வழங்கப்பட்டால் அதை முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் நல்லாட்சிக்கான தேசிய முன்ணியின் நிலைப்பாடா?

இதையே ஹக்கீமும் றிஷாதும் கொண்டுள்ளனர். அதுதான் உங்கள் நிலைப்பாடா? அப்படியாயின் **கிழக்கு முஸ்லிம்கள் சஜிதுக்கு அளிக்கும் எவ்வொரு வாக்கும் தற்கொலை முயற்சிக்கு சமமாகிவிடும்.** இது குறித்து சஜித் ஆதரவாளர்களும் ஆதரவுக் கட்சிகளும் வெளிப்படையாக தமது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துமாறு நான் சவால் விடுக்கிறேன்.

## மூளையின் செல்களை சிதைத்து, ஞாபக சக்தியைக் குறைக்கும்

# அல்சைமர் நோய்!




வயதிற்கேற்ப அனைத்து வகையான நோய்களும் எம் உடலை தாக்கத் தொடங்குகின்றன. அதில் அல்சைமர் என்ற நோய் முதுமையில் மறக்கும் தன்மையை ஏற்படுத்தி கொஞ்சம் கொஞ்சமாக மூளையின் செல்களை சிதைத்து, ஞாபக சக்தியைக் குறைத்து, நம்மை நமக்கே மறக்க வைத்துவிடும் நோயாக காணப்படுகின்றது.

இந்த நோய் 65 வயதைத் தாண்டியவர்களை அதிகம் பாதிப்பதுடன், மூளையின் உயிரணுக்களை சிதைவடையச் செய்து ஞாபக மறதி, நினைவாற்றல் மாற்றம், தாறுமாறான நடத்தைகள், உடல் செயலிழப்பு ஆகியவற்றை ஏற்படுத்துகின்றது. இந்நோய் மெதுவாக ஆரம்பித்து நாட்பட தீவிரமாகும். சமீபத்திய நிகழ்வுகளை நினைவில் வைத்துக்கொள்ள சிரமப்படுவதும் இந்நோயின் ஆரம்பக் கட்ட அறிகுறிகளில் ஒன்றாகும்.

மூளையில் ஏற்படும் சிக்கலான நிகழ்வுகளால் அல்சைமர் நோய் ஏற்படுவதாக கூறப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களின் நினைவாற்றலையும், சிந்தனைத் திறனையும் இழக்க நேரிடுவதுடன் நீண்டநாள் நண்பர்களின் பெயர் களையும், சுற்றத்தாரைப் பற்றிய நினைவுகளையும், முகவரிகள், வீதிகளின் பெயர்கள் மற்றும் பிறவிடயங்களை ஒரு கட்டத்தில் மறந்துவிடும் அளவிற்கு மோசமானதாக மாற்றிவிடுகின்றது. இதன் பாதிப்பை ஆரம்பத்தில் கண்டறிந்தால், உரிய சிகிச்சையளித்து குணப்படுத்த முடியும். ஆனால் முற்றிய நிலையில் குணப்படுத்துவது சாத்தியமில்லை.

உலக நாடுகளில் வசிக்கும் மக்களில் குறிப்பிட்ட சதவீதத்தினர் 65 வயதைக் கடந்த முதியவர்களாக இருக்கின்றனர். இவர்களது எண்ணிக்கையில் காணப் படும் அதிகரிப்பு காரணமாக நோயா பத்தும் அதிகரித்துக் காணப்படுகிறது. உலக மக்களின் மரணத்திற்கான காரணங்களில் இந்த நோய் ஆறாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. அமெரிக்காவில் மட்டும் 54 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தற்சமயம் உலகம் முழுவதும் சுமார் 4 கோடியே 70 இலட்சம் நோயாளிகள் இறந்துள்ளதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றது.

**அல்சைமர் நோய் பற்றிய உண்மை:**

அதிகரித்துச் செல்லும் ஒரு மூளை நோயாக அல்சைமர் நோய் காணப்படுகின்றது. இது சிலவற்றை மறந்து போவதில் இருந்து ஆரம்பித்து, சமீபத்திய நிகழ்ச்சிகளையும் மறந்துபோகும் ஞாபகயிழப்பில் சென்று முடியும். இறுதியில் அன்றாட செயல்களையும் அடிப்படைக் கடமைகளையும் ஆற்ற முடியாத நிலை உண்டாகும். இந்நோய்க்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. மூளையில் உண்டாகும் சில சிக்கலான நிகழ்வுகளால் இது ஏற்படலாம் என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர்.

**இதன் பாதிப்புக்கள்:**

அதிகரித்துக் கொண்டே செல்லும் இந்த மூளை நோயால் எச்சரிக்கைக் குறிகள், மனநிலை மாற்றங்கள், சமீபத்தியத் தகவல்களை மறந்து போதல், பிரச்சினைகளைத் தீர்ப்பது சவாலாக மாறுதல், வீட்டிலும் பணியிலும் வழக்கமான வேலைகளை முடிப்பதில் சிரமம், இடக் குழப்பம், வாசிப்பதில், தூரத்தைக் கணிப்பதில் மற்றும் நிறம் அறிதலில் சிரமம், திகதி மற்றும் நேரத்தை மறந்து போதல், பொருட்களை இடமாற்றி வைத்தல், மனிதர்களை அறிவதில் குழப்பம், சமூக மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்குதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுகின்றது.

மேலும், நினைவாற்றல் குறைய ஆரம்பித்து தற்கால நினைவுகள் மறந்துவிடும், சிந்திக்கும் திறன், செயல்களைத் திட்டமிட்டு வரிசையாகச் செய்யும் திறன், முடிவெடுக்கும் திறன், அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளைத் தீர்க்கும் சக்தி அனைத்தையும் பாதித்து விடும். சூழ்நிலைக்குப் பொருந்தாத அழுகை, சிரிப்பு, வழக்கமான குணாதிசயம் மாறி, ஆளுமைத் தன்மை ஒழிந்துவிடும். மொழி, பழக்க வழக்கங்கள் அத்த னையும் சிதைந்து விடும். தினசரி வாழ்க்கையில் தனக்கு வேறொருவரின் உதவி தேவைப்படும் நிலை ஏற்பட்டுவிடும்.

**இந்நோய் வராமல் தடுப்பது எப்படி?:**

வாசித்தல், மகிழ்ச்சிக்காக எழுதுதல், இசைக் கருவிகள் வாசித்தல், முதியோர் கல்வியில் சேருதல், குறுக்கெழுத்து, புதிர், சதுரங்கம் ஆகிய உள்ளரங்க விளையாட்டுக் களில் ஈடுபடுதல், நீச்சல், பந்து வீசுதல் போன்ற குழு விளையாட்டுக்களில் இணைந்து செயற்படுதல், தவறாமல் நடைப்பயிற்சி, உடற்பயிற்சி, யோகா மற்றும் தியானம் போன்ற செயற்பாடுகளிலும் உடல், உள, சமூக மற்றும் பொழுது போக்குகளில் ஈடுபடுதல்.

மேலும், இதயம் சீராக இயங்கும் வகையில் உடலை பேணுதல், நீரிழிவு நோயினைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், உடற்பருமனை குறைத்தல், புகைப்பிடித்தலை தவிர்த்தல், இரத்த அழுத்தத்தை சரியான அளவில் வைத்திருத்தல் வேண்டும். மிக முக்கியமாக மூளையை சுறுசுறுப்பாக வைத்திருத்தல் மிக அவசியமாகும்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டோம், நமக்கு வயதாகிவிட்டது என்று, தூங்குவது, தொலைக்காட்சி பார்ப்பது போன்ற மூளைக்கு வேலைதராத எளிமையான செயல்களை செய்வது அல்சைமர் நோய்க்கு வழிவகுத்துவிடும். மூளையை சுறுசுறுப்பாக வைத்திருக்க புதிய புதிய விடயங்களைக் கற்றுக்கொள்ள முயற்சிப்பது மிகவும் நன்றாகும்.

உதாரணமாக, புதிதாக ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும், அறிவு விளையாட்டுகள், போட்டிகள் போன்றவற்றில் கலந்துகொள்ள வேண்டும். புத்தகங்கள் படிப்பது, படித்ததை மற்றவர்களிடம் பகிர்வது, எழுதுவது போன்றவைகளும் மூளைக்கு வேலைத்தரக் கூடியவைகளாகும்.

தன்னார்வ தொண்டராக, பொதுத் தொண்டாற்றுவது அல்சைமர் நோய் வருவதை தடுப்பதாக கனடா நாட்டிலுள்ள பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவொன்று கூறுகின்றது. புதியவர்களை சந்திக்கும் போதும், புதிய வேலைகளில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளும் போதும், எமது மூளையில் என்டோர்பின்ஸ் என்ற ஹோர்மோன் சுரக்கிறது. இது மூளையை சுறுசுறுப்பாகவும், உற்சாகமாகவும் வைத்திருக்க உதவுகிறது. ஒரேவிதமான வேலைகளை நாளாந்தம் தொடர்ந்து செய்யும்போது மூளைதானியங்கி முறைக்கு சென்றுவிடுகிறது. இதனால், நாளடைவில் மூளைச்செல்கள் இறக்கத்தொடங்குகின்றன.

புதியவைகள் மற்றும் வித்தியாசமானவைகளை முயற்சிக்கும்போது மூளைவிழிப்பு நிலையில் இயங்குகிறது. காலை எழுந்தவுடன் பல்துலக்கும்போது, வலது கையினால் தூரிகையைக்கொண்டு பல்துலக்குபவராக இருந்தால், அதைமாற்றி இடது கையினால் பல்துலக்க முயற்சி செய்யுங்கள். பல்துலக்கும்போது ஏதோ எண்ண ஓட்டத்தில் இருக்கும் மூளை அன்றைய தினம் விழிப்பு நிலைக்கு வந்துவிடும்.

இந்த எளிய முறையை செய்வதன் மூலம் எமது மூளையை தானியங்கி நிலையிலிருந்து விழிப்பு நிலைக்கு கொண்டு வரமுடியும். இதுபோன்று, கடைக்கு தினம் செல்லும் வழியில் செல்லாமல், வேறு வழிகளில் செல்ல முயற்சிக்கும்போதும், இதுபோன்ற பயிற்சிகள் மூலமாக உடலை சரியாகப் பேணுவதன் மூலமாகவும் மூளையை சுறுசுறுப்பாக்கி, அல்சைமர் நோய் வருவதிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். அதுமாத்திரமன்றி மக்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்களை நடாத்துவதன் மூலமும் இந்நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க முடியும்.

முதியவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே வருகின்ற அதேவேளை, அவர்கள் அல்சைமர் நோய்க்கும் ஆளாகியும் வருகின்றனர். இதனால் அவர்களின் நிலைமை மோசமாகி செல்வதுடன், தங்களின் நினைவாற்றலை படிப்படியாக இழந்து செல்கின்ற நிலைக்கும் உள்ளாகின்றனர். அதனால் இந்த நோய் பற்றிய அதிக விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதைச் சுற்றியுள்ள அனைத்து களங்கங்களையும், தவறான தகவல்களை அகற்றுவதற்கான தினம், உலகளவில் கொண்டாடப்பட்டு வருகின்றது. அத்தினத்தில், நோயுடன் வாழும் மக்களின் வாழ்வில் அனைத்து விதமான தடைகளையும் நீக்கி, ஒவ்வொரு அம்சத்திலும் அவர்களை சமமாக நடாத்த உறுதிமொழி எடுக்க வேண்டிய நாளாகவும் அத்தினம் திகழ்கின்றது.

அல்சைமர் நோயுடன் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான ஒன்றுக்கு தகுதியானவர்கள், அதை ஒரு சமூகமாக நாம் கொடுக்கத் தவறிவிட்டோம். உலக அல்சைமர் தினத்தில், அல்சைமர் நோயுடன் வாழ்வது உங்களை எந்த

09 பக்க தொடர்ச்சி...

வகையிலும் மற்றவர்களைவிட தாழ்ந்ததாக மாற்றாது என்பதையும் நாம் அனைவரும் மனதில் கொள்ள வேண்டும்.

அல்சைமர் நோய் பாதிப்பால் ஞாபக மறதி, தாறுமாறான நடத்தை, உடல் செயலிழப்பு போன்ற தாக்கங்கள் எமது உடலில் நிகழ்கின்றதென, ஜெர்மனியைச் சேர்ந்த மருத்துவர் அலோயிஸ் அல்சைமர் என்பவர் 1906 ஆம் ஆண்டு முதன் முதலில் இந்நோயைக் கண்டறிந்தார்.

1999 ஆம் ஆண்டு சர்வதேச அல்சைமர் அறக்கட்டளை நிறுவனம் இலங்கைக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கையில் அல்சைமர் அறக்கட்டளை (Lanka Alzheimer's Foundation) நிறுவப்பட்டது. தமித்தேகம என்பவர் தன் மனைவி லோரெய்ன் யூ உடன் சேர்ந்து இதனை நிறுவினார். இது பல நன்கொடையாளர்களால் இவ்வறக்கட்டளை இயங்கி வருகின்றது.

இலங்கையிலுள்ள அல்சைமர் அறக்கட்டளை (Lanka Alzheimer's Foundation) நாட்டிலுள்ள அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக கடந்த 21 வருடங்களாக இயங்கி வருகின்றது. இலங்கையில் முதுமை பராமரிப்பு சேவைகளை வழங்கும் முன்னணி நிறுவனமாகவும் இது வளர்ந்துள்ளது.

இந்நோய்க்கு மருந்து, உளவியல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் மூலம் சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றது.

இந்நோயின் கடுமையைக் கருத்தில் கொண்டு வருடாந்தம் செப்டம்பர் 21 ஆம் திகதி உலக அல்சைமர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. மூளை செல்களை மோசமாக தாக்கியழிக்கும் அல்சைமர் நோய் ஏற்படுவதற்கான காரணம் மற்றும் இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இத்தினத்தை சில நாடுகள் ஒரு மாதம் முழுவதும் கொண்டாடுகின்றது.

இந்நோயின் பாதிப்பை ஆரம்பத்தில் கண்டறிந்து அதற்குரிய சிகிச்சைகளை முறையாக பெற்றுக்கொள்ள முயற்சிப்பதன் மூலம் இந்நோயின் பாதிப்பிலிருந்து விடுபடமுடியும். ஆனால் முற்றிய நிலைக்கு வந்த பின்னர் குணப்படுத்த முயற்சிப்பதில் எவ்விதமான சாத்தியமும் இல்லை என்பதை நாம் அனைவரும் அறிந்துகொள்வோம்.

# நாட்டின் மிகப் பெரிய அரசியல் கூட்டணியாக பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி உருவாகிறது – பிரதமர் தினேஷ் குணவர்தன அறிவிப்பு









“ஒரு வெற்றி நாட்டிற்கு தைரியத்தின் சேர்க்கை” என்ற தொனிப்பொருளில் இலங்கை அரசியலில் புதிய திசையை உருவாக்கும் நோக்கில், நாட்டின் பரந்துபட்ட அரசியல் கூட்டணியான பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நேற்று முந்தினம் (05) கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜில் உதயமானது.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மைக் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் திஸ்ஸ யாப்பா ஜயவர்தன, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அமைச்சர் டிரான் அலஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சார்பில் சிவநேசதுரை சந்திரகாந்தன், தேசிய காங்கிரஸை பிரதிநிதித்து வப்படுத்தும் ஏ.எல்.எம்.அதாவுல்லா, ஐக்கிய மக்கள் கட்சி சார்பில் அரவிந்த குமார், தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் அசாத் சாலி, தேசப்பற்றுள்ள மக்கள் சக்தி சார்பில் சுகத் ஹேவாவிதாரண ஆகியோர் புதிய அரசியல் கூட்டணியுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

அங்கு உரையாற்றிய பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்தன,

இது ஒரு வரலாற்று தருணம். சவால்களுக்கு மத்தியில், நாட்டிற்கு வெற்றியைக் கொண்டு வருவதற்கு நீங்கள் தொடர்ந்து பங்களித்து ள்ளீர்கள், மேலும் எதிர்காலத்தை மீண்டும் பாதுகாப்பதில் உறுதியாக உள்ளீர்கள். அரசாங்கங்கள் மற்றும் அரச தலைவர்களை உருவாக்கிய பாரம்பரியத்தில் நாங்கள் பங்காளிகள். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி யாகவும், மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகவும் பொது ஆணையின் மூலம் நியமிக்கப்பட்டு அவர்களின் தலைமையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொண்டனர். முற்போக்கு தேசிய இயக்கத்திற்கு இந்நாட்டு மக்கள் வழங்கிய இரும்பு நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்லக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில், நாம் அந்தப் பெரும் பொறுப்பை நிறைவேற்றிக் கொண்டிருந்த போது, நெருக்கடியான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின் காரணமாக எமது ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினார்கள். அந்த அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நமது நாட்டை சமூக உறுதியற்ற நிலைக்கு மாற்றியது.

கொவிட் தொற்றுநோய்க்குப் பிறகு, உலகப் பொருளாதாரம் சரிந்தது. இன்றும் அது மீளவில்லை. இதில் எழுந்த பெரும் சவாலுக்கு தலைமை தாங்குவதற்காக 134 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மை யானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக நியமித்தனர்.

சுதந்திர இலங்கையின் தந்தையாகக் கருதப்படும் டி.எஸ்.சேனநாயக்கா தலைமையில் இருந்து இன்றுவரை கூட்டு அரசாங்கங்கள் இருந்துள்ளன. எனவே, ஒரு பகிரப்பட்ட அரசாங்கம் மற்றும் அரசியல் ஒற்றுமை ஒருமித்த கருத்து மூலம் மட்டுமே அடைய முடியும். அந்த உடன்படிக்கையை உருவாக்க, நமது எம்.பி.க்களும், புதிய முன்னணியை உருவாக்கும் பங்களிப்பில் பங்கேற்கும் அனைத்து எம்.பி.க்களும் ஒன்றிணைந்தனர்.

முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் எமது சக பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர். ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை நீங்கள் விரும்பும் எதிர்கால இலங்கையை உருவாக்கும் வெற்றியாக மாற்ற நாங்கள் உழைத்து வருகிறோம் என்றார்.

SPORTS லீடர்
sportsml77@gmail.com

# வரலாற்றுச் சாதனை படைத்த ரொனால்டோ..!



காற்பந்து உலகில் 900 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை காற்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ படைத்துள்ளார். நேஷன்ஸ் லீக் போட்டியில் குரோஷியாவுக்கு எதிராக போர்த்துக்கல் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இப்போட்டியில் 34வது நிமிடத்தில் ரொனால்டோ ஒரு கோலை பதிவு செய்தார். இதன் மூலம் தற்போது வரை காற்பந்து உலகில் 900 கோல்கள் அடித்த முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை ரொனால்டோ படைத்துள்ளார். இவருக்கு அடுத்தபடியாக மெஸ்ஸி 838 கோல் அடித்து 2வது இடத்தில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது

# இலங்கைக்கு பெருமை சேர்த்த சச்சித்ரா!

சமீபத்தில் ஸ்வீடனில் நடைபெற்ற உலக மாஸ்டர்ஸ் தடகள சம்பியன்ஷிப் போட்டியில் சச்சித்ரா ஹர்ஷனி ஜயகாந்த வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். 40-44 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் தாண்டுதல் போட்டியில் அவர் அந்த திறமையை வெளிப்படுத்தினார். இதன்போது அவர் 5.24 மீட்டர் நீளம் தாண்டி இந்த பதக்கத்தை வென்றுள்ளார். சச்சித்ரா இலங்கை பொலிஸில் பணிபுரிகிறார். மாஸ்டர்ஸ் போட்டி கடந்த ஆகஸ்ட் 13ம் திகதி முதல் 25ம் திகதி வரை நடைபெற்றது. இதில் 119 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர். அந்த போட்டியில் இலங்கையில் இருந்து 14 பேர் இணைந்திருந்தனர்.



# இத்தாலியில் கிரிக்கெட் விளையாட தடை

இத்தாலி, மோன்பால்கோன் நகரில் கிரிக்கெட் விளையாட தடை விதித்துள்ளனர். இத்தகைய தடையை விதிப்பதற்கான காரணம், நகரின் கலாசார விழுமியங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக மேயர் சுட்டிக்காட்டி இத்தடையை விதித்துள்ளார்.



ஊரில் விளையாட்டு மைதானம் அமைக்க தன்னிடம் இடமோ பணமோ இல்லை என்றும் கூறி, தனது ஊரையும் கிறிஸ்தவ விழுமியங்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவும் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. விதிக்கப்பட்ட தடையை மீறி விளையாடினால் 100 யூரோக்கள் வரை அபராதம் விதிக்கப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நியூசிலாந்து சுழற்பந்து பயிற்றுவிப்பாளராக ரங்கன ஹேரத்

நியூசிலாந்து கிரிக்கட் அணியின் சுழற்பந்து பயிற்றுவிப்பாளராக இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் வீரர் ரங்கன ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டு நியூசிலாந்து கிரிக்கட் சபை இதனை உறுதிப்படுத்தியுள்ளது. ஆப்கானிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடர்களுக்காக அவருக்கு இப்பதவி



வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரி பிரிமியர் லீக் சுற்றுப் போட்டி

**-அஸ்ஹர் இப்றாஹிம்-**

மலைநாட்டில் புகழ் பூத்த ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் மற்றுமொரு சாதனையாக ஹைலண்ட்ஸ் பிரிமியர் லீக் கிறிக்கட் சுற்றுப் போட்டி மற்றும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இடம்பெற்றன. பாடசாலை மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையிலும் பாடவிதான செயற்பாடுகளுக்கு அப்பால் புறக்கிருத்திய செயற்பாடுகளில் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் தரம் 6,7,8,9,10,11,மற்றும் உயர்தர வகுப்புகள் என தனித்தனியாக போட்டிகள் இடம்பெற்றன. இப்போட்டிகள் கடந்த மூன்று தினங்கள் ஹட்டன் டன்பார் மைதானத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் முதல்வர் எஸ்.ராஜனின் வழிகாட்டலினூடாகவும், பிரதி அதிபர்களினதும், விளையாட்டு குழுவினதும், வகுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள் ,மாணவர்கள், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் அனைவரினதும் பெருமுயற்சியூடாகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. அனைத்து போட்டிகளிலும் வகுப்பு ரீதியாக 1ம், 2ம், 3ம் இடம் பெற்றமைக்கான கேடயமும் போட்டிகளில் தனிப்பட்ட சாதனைகளை பதிவு செய்த 42 மாணவர்கள் வெற்றி கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





# சென்றல் கேம்ப் கிறிக்கட் போட்டி




**-அஸ்ஹர் இப்றாஹிம்-**

சென்றல் கேம்ப் விளையாட்டுக் கழகம் 64 அணிகளை உள்ளடக்கி நடாத்திய அணிக்கு 7 பேர் 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மாபெரும் மென்பந்து கிறிக்கெட் சுற்றுப் போட்டியில் களுவாஞ்சிகுடி மெக்ஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தினையும் 40,000 ரூபாய் பணப்பரிசினையும் தனதாக்கிக் கொண்டது. இச்சுற்றுப் போட்டியில் களுவாஞ்சிகூடி மெக்ஸ் விளையாட்டுக்கமகம் முதலாவது போட்டியில் டைட்டன்ஸ் விளையாட்டுக்கழகத்தையும், இரண்டாவது போட்டியில் கதிரவன் விளையாட்டுக்கழகத்தையும், மூன்றாவது போட்டியில் செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தையும், காலிறுதிப் போட்டியில் அக்னிஸ்டார் விளையாட்டுக்கழகத்தையும், அரையிறுதிப் போட்டியில் நியூ எவரெஸ்ட் விளையாட்டுக்கழகத்தையும் , இறுதிப் போட்டியில் ஈஸ்டன் சலன்ஜேர்ஸ் விளையாட்டுக்கழகத்தையும் வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14யில் அமைந்துள்ள மெட்ரோ மீடியா நெற்வேர்க் நிறுவனத்தில் 2024.09.07ம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.